

ஓம்

பக்குவிகட்குரியது

ஞானனந்த

சோண சைல சற்குரு

ரமண மணி மாலை.

BY,

Pinnalur Sutha Athvaithi,

Ramalingam Pillay

விலை அணா 3.

ரீ பு கீ ளை த.

அநுபவ வாரிதியி லழித்த வென்னை யகண்டபர ஞானமெனு மாவாய்க் கொண்டு, சநாதனமாம் பரப்பிரம தீரத் தின்கண் சகஜமதா யேற்றியசற் குருவே போற்றி, வினச முறுந் தேகாதி நானென் றெண்ணி விதம் விதமாந் துன்பமிகுந் திருந்த வென்னை, யநுமயமாம் பரப்பிரம நீ யென்றோதி யகண்டசுக நல்கியசற் குருவே போற்றி. 1.

அகிலமுமே யகண்டபரப் பிரமமென்று மதுதானே நீயென்று முபதேசித்துச், சகமுதலி துண்மையதாஞ் சட னானென்றுஞ் சங்கையெலா நீக்கியசற் குருவே போற்றி விகலமுறுங் கருமத்தால் கதியுண் டென்று வெகுகால மயக்கமுடன் சுழன்ற வென்னைத், தகைமைமிகு மகண்டபரஞானத்தந்து தற்பரமே யாக்கியசற் குருவே போற்றி. 2.

அருள் வடிவா யெழுந்தருளி யென்னையாண்ட அகண்டபர வுருவான குருவேபோற்றி, சருவவித வுலகத்துஞ் சார்வதற்குச் சாலவுமே யரியபர குருவே போற்றி நிரும மாய் நிஷ்களமாய் நிகரில் லாதாய் நீக்கமற நிறைந்தப குருவே போற்றி, பரசிவமாய்ப் பராபரமாய்ப் பாமான் ம னாய்ப் பரப்பிரம மான பரகுருவே போற்றி.

விமலமதாய் வேறற்ற வகண்டாகார விருத்தியினி விளக்கியசற் குருவேபோற்றி, யமலமதா யகண்டபர வித் யாகி யவித்தையெலா நீக்கியசற் குருவே போற்றி, நிமல தாம் வித்தைக்கு மப்பாலாகி நிச்சலமாய் நின்றபர குருவே போற்றி, சமமதுவாய்ச் சத்தியோரு சங்கமின்றி சன்மாத்ர மானபர குருவே போற்றி. 4.

சத்தியசிற் சுககனமாம் குருவேபோற்றி, சலனமிலாச்சாந்தபர குருவே போற்றி, நித்திய நிர்க் குணமான குருவே போற்றி, நிரஞ்சனமாய் நின்றபர குருவே போற்றி, சுத்தபர வெளியான குருவே போற்றி சூட்சமமாய் நிறைந்தபர குருவே போற்றி யத்துவித பூரணமாங் குருவே போற்றி யகண்டமதாஞ் சற்குருவே போற்றி போற்றி. 5

OM.

ARUNAGIRI
SRI RAMANA
PARABRAHMANE NAMAHA.

1. Let them waste that are inclined to waste their time in vain being charmed with love placing intense eagerness on the earth, on the inconstant secular prosperity and income. and on the impure skin of the fair sex. But I have placed my love on thy feet and Thou ast, O Lord! been a vision by day and a dream y night. This is enough for me. The penance have performed has yielded me good fruits.

2. I have been fovoured with all the ndowments of my God "The Supreme Light f Grace" so as to cause this world to shine ke the Holy land of Celestial Beings removing all the sins, enjoying happiness and living with benevolent thoughts, and to see everywhere the propagation of the path of wisdom (the pure sanmarga) wich could eradicate all kinds of evils. This is enough for me. The penance I have performed has yielded me good fruits.

3. I have perceived the Supreme effulgent Light that has neither beginning nor end. that dances ever iu the Hall of wisdom shining with its excellent Bliss. Righteousness and good attributes and the divine drug wich changes the inferior metals into Gold. I am therefore freed from all obstacles of castes and religious discords, being in absolute solitude.

4. When I am engaged in beholding and thinking of Thee, in praising Thee, in listening to thy devotees while they sing thy Hymns, in medidating upon thy purifying from, and in my dragging, holding and embracing Thee with Love, O Lord, Thou art to me as sweet as Sugar-cane. O Thou Sweet fruit! ripened in me to console my soul disallowing it from being enchanted, with body perspired O Thou Gracious Ambrosia. that produces eternal Bliss! O Supreme Being of divine dance in the Hall of wisdom whom the devotees call as the Purifier of Souls! I beseech thee to accept my small garland of words.

5. It is Light only that shines and pervades the whole Universe It is not only in the Universe, but is also full within, without, the innermost and outermost parts of the movable and immovable objects dispelling darkness in them. This is known to the world, O Maiden! Thou art not unaware of this. Nothing else save this Light is ever existent, being all in all. Know that this is the truth declared by Vedas and Agamas.

ஓம்.

தத்ஸத்.

ஸ்ரீரமணகுரு பரமாத்மனே நம:

திருவண்ணாமலைமேல்
தீனர்களை இரட்சிக்கும் பொருட்டு அருளே
உருவாய் அவதரித்து குருமூர்த்தமா யெழுந்தருளி
யிருக்கும் மஹான்
ஸ்ரீ ரமணமகரிஷி அவர்கள்மீது

சோணசைல சற்குரு
ரமண மணி மாலை.

இஃது
சுவாமிகளால் அங்கீகரிக்கப் பட்டது
பினைலூர் சுத்த அத்வைதி
சிவானந்த சாகர
இராமலிங்கம்பிள்ளை யவர்களால் இயற்றப்பட்டு
ஓர் அன்பரால்

சிதம்பரம்
ஸ்ரீ பாலாம்பிகாவிலாச அச்சுக்கூடத்தில்
பதிப்பிக்கப்பட்டது.
1922

திருவண்ணாமலையிலெழுந்தருளிய சற்குரு,

ஸ்வாமி ரமணானந்தர்

திருவாய் மலர்ந்தருளிய

வெண்பா.

உன்னிடத்தி லொப்புவித்த வுள்ளத்தா லெப்பொழுது
முன்னிணைக்க ணெல்லாமு மொன்றுருவா—யன்னியமி
லன்புசெயு மன்றே யருணாசலா வெல்கு
மின்புருவா முன்னி லாழ்ந்தே.

மோகமெனுங் கடல்கடந்து முத்தியெனுங்
கரைகாண்பான் முதிர்ந்தநாலாம்
பாகமெனு மலர்கொண்டு பக்தியெனும்
புனலாட்டிப் பரிந்து சாத்திச்
சோகமெனப் பாவித்துத் துரிய மெனும்
விளக்கேற்றிச் சோக நீங்கி
யாகமெனுங்கோயிலின்கண் ணறிவென்னுங்
கணபதிக்கே யன்பு செய்வாம்.

ஆஹா! சொர்ப்பனக்காட்சி அஞ்ஞானத் தூக்கத்தினின்று மெழுந்திருங்கள். உன்னை புணரும் மெய்ஞ்ஞான விழிப்பையடையுங்கள் ஆத்ம அநுபவ உழைப்பால் சிம்மம்போல் அஞ்சாத தீர வீர சூர மஹா சாந்தசீலர்களாய் விளங்குங்கள்.

மரணம் வருவதறிந்திருந்தும்
வாணாள் வீணாக்கன்மின்.

தன்னையுணர்ந்த ஞானியொருவரை ஒரு போலிப்ப்ரவாதி, விவேகத்தெளிவைத் தடுமாற்றும் பொருட்டே கேட்டகேள்வி அவர், தங்குதடையின்றி அதிநுட்பமாய், விமரிசையாய், அழகாய் அளித்த பதில்:—

1. எல்லாவற்றிலும் பழமையானது எது?
“கடவுள்,, ஏனெனில், அவர் எக்காலத்தும் உள்ளவர்

2. எல்லாவற்றிலும் அதிக அழகுள்ளது எது?
“உலகம்,, ஏனெனில், அது கடவுள் ஸ்ருஷ்டி.

3. எல்லாவற்றிலும் மிகப் பெரியது எது?
“ஆகாசம்,, ஏனெனில், அது சகல ஸ்ருஷ்டிப் பொருள்களையும் தன்னிடத்தில் அடக்கிக்கொண்டிருப்பது.

4. எல்லாவற்றிலும் நிலையுள்ளது எது?
“கைகூடுமென்கிற விருப்பம்,, ஏனெனில், சகலமும் ஒருவனால் இழக்கப்படினும், இவ்விருப்பமாத்திரம் இழக்கப்படாமல் அவனிடத்திலேயே நிலைத்திருப்பது.

5. எல்லாவற்றிலும் உத்தமமானது எது?
“அறநெறி,, ஏனெனில், இதைவிட உத்தமம் வேறு ஒன்றுமே இல்லை.

6. எல்லாவற்றிலும் வெகு விரைவுள்ளது எது?
“மனோபாவம்,, ஏனெனில், இது ஒருவிநாடிக்குள் ப்ரபஞ்சமுழுதும் சுற்றிவரும் வல்லமையுள்ளது.

7. எல்லாவற்றிலும் அதிக கஷ்டமானது எது?
“தன்னைத்தான் அறிதல்,,

8. எல்லாவற்றிலும் எளிது எது?
“பிறருக்குப் புத்திபுகட்டுதல்,,

9. எல்லாவற்றிலும் அதிக வல்லமையுள்ளது எது?
“குறைபாடு,, ஏனெனில், இது ஒருவன் வாழ்நாட்களில் சகல ஆபத்தையும் அடையச் செய்வது.

10. எல்லாவற்றிலும் அறிவுள்ளது எது?
“காலம்,, ஏனெனில், இது யாவற்றையும் வெளியாக்குவது

திருவண்ணாமலைமேல் ஜீவர்களை இரட்சிக்கும்
பொருட்டு குருமூர்த்தமாக பிரஹ்மானந்த
ஸ்வரூபராய் வீற்றிருக்கும்

ஸ்ரீ ரமண மஹரிஷி அவர்கள் மீது

பிள்ளையார் சுத்த அத்வைதி சி...

இராமலிங்கம் பிள்ளை யவர்கள்

திருவாய்மலர்ந்த பாசுரங்கள் நிந்தா ஸ்துதி.

இந்திரியம் புலத்தின்வழி செல்லாமல் தடுத்திட்ட வினையில்லாக்கொடியனுக்கும், தந்திரங்கள் மிகச்செய்து மனத்தின்வழி நடவாமல் தடுக்காமத் துரோகியாகும், மூன்று வரும் துணைவர்களை வஞ்சியினுக் கலையவிட்டான் முழுநீதுமே வம்பனுக்கும், குக்கிரிந்த மேக்கிடுவான் ரமணனவன் நீச்செயல்க ளிவையெனவே குறியில்லையே.

மனக்குரங்கையடக்கிவிட்டு மரக்குரங்கைத் துணைபிடித்தோன் மானம்விட்டோன், வனத்தினின்மிக குடிகொண்டோன் வானிலிருக்கும் வகையில் நிற்போன், இனத் தவிரு நினைப்பென்று மறைப்பென்று மிரண்டையுமே விட்டோனுக்கும், சனக்கூட்டத்தில் சார்பில்லான் நீச்செயல்க ளிவைதானம்மா.

உடம்பத்திலேவாழான் குணக்கேட்டு காணுமனக்குறிப்பில் நில்லான் படும்பாடிக் கேதேனும் செய்வாரைத் தடுத்திடுவான் பகைக்கின் தம்மை, இடும்பைபற் பலபேசி நல்லாரை பெருமிழிவே செய்வான், அடும்பாவி யாகியவர் மனைவறு தன்மையதை யாய்ந்து பாரீர்.

மஞ்சமமர்ந்தோன் விரதவிற்றேன் செருப்படியுங்கல்லடியும் மகிழ்வாய் பட்டோன், விண்ணுரிய வனைவிற்றேன் வத்திப்பிட்டதைத் வாங்கி விக்கவுண்டோன், பண்ணைதனுல் இன்னாமையே பணிரமணன் தன்னையுமிப்பாரின்மீது, நன்னிருப்பிடமொருக்கபமுதயோகம் தவனிக்குறைப்பகளிடோ

ஓம்.

தத் ஸத்

ஸ்ரீ ரமண குருபரமாத்மனே நம:

பின்னலூர் சுத்த அத்வைத சிவானந்தசாகர

இராமலிங்கம் பிள்ளை யவர்கள்

கதம்பவனத்தில் பரமாத்ம நிஷ்டை எழுந்தருளியிருந்த

சுயமாக திருவாய் மலர்ந்த

சோணசைல சற்குரு

ரமண மணி மாலை.

விநாயகர் காப்பு,

ஏகமதா மின்ப ரமணமணி மாலையிது
மோகமதை நீக்கியே முத்திதரும்—போகமதாய்த்
தந்திடவே நெஞ்சே தனிபதிவா மன்புநிலைத்
தந்திமுகன் றாடனிற் றாழ்,

விருத்தம்.

கருணைமணங் கதிக்குங் கமலத்தே யினிக்கும் கதிக்குவழி காட்டிவிடும் வேதமணம் நாறும், பொருணிலைந்த சிவயோக மணம்வீசும் ஞானம் பொங்கிவரும் வேதாந்த மணந்தழும்பும் பொல்லா, மருவிக்கு மரமலராம் மோனமணம் மணக்கும் மதிபெருகும் சித்தாந்தமணம்பரிமளிக்கும், அருமையவாழ் ரமணகுரு ஆனந்த மருளும் அஃதார அண்ணலடி அருமலரி னிடத்தே. (1)

பரிதிமதி யிரண்டுமக லோர்த்திலையில் விளக்கப் பகர்வரி
தாய் மன்னிநின்று மோங்கியொளிர்க, அரிபிரம ரடிமுடி
யுந் தேடியில காணு அருணகிரி குருபரனை வன்புநிலைத்
தேசே, பொறிபுலனின் வெளிமயக்கே கொண்டுழலும்
பாவி, துரியநிலைப் பெருவாழ்வில் வாழும் நாளுளதோ
துயினையே பிடித்துக்கொண்டு மேவுகின்றேன் நாயேன். (2)

அனைத்தரிய வானிலையே யதனுள் காற்றே யழல்நீரு
மவனிமதி பருணனெரு, விளக்குமுறுஞ் ஜீவசிவ விதியோன்
விண்டு மேவுகின்ற சராசரமாம் பிம்பம் தன்னில், கனக்கமி
லாச் சித்பரமாய்க் கனிந்து நிற்கும் கடவுளாம் சம்மணமுனி
கருதியெம்மைத், தனக்கமரும் வினையகற்றித் துயரம்போ
க்கித் துரியநிலை யுபசாந்த மருளும் தேவே. (3)

ஓங்காரப் பிரணவமா யுலகமோதி யொளிபாதி யுருவருவ
ஓசையாகி, நீங்காத நிலையாகி யிரண்டா யொன்றாய் நித்திய
மாயனைத்திற் குஞ்சாட்சியாகி, ஆங்காரத் தற்போத மல்லா
தாகி அருவுருவின் பொருளாகி யனுபவத்தில், தேங்காத
சுத்தசிவ மறுவேறாநுப்த் தெவிட்டாமல் நிற்கின்ற நயன
தேதே. (4)

உன்னன்பு மிசப்பெருகி யுருகு வோர்க்கும் உன்ற
னையே மறவாத உத்தமர்க்கும், கள்ளமிலை யில்லாமல் கனி
ந்து நின்று கண்ணருவி யெனவொழுகக் கதறுவோர்க்கும்,
உன்னருளை வெளியாகு முண்மைக் கோனே உருகாத நெஞ்
சினர்க்கு மொளித்திருந்து, வல்லல்நீ விளக்குகின்றாய்
நயனதேவே வழிநோக்குனடியை வணங்குகின்றேன். (5)

வேதாந்த ரசமணியே வித்வசிகாமணியே விளைந்திடுமோ மோனமதில் விளங்குகின்றமணியே, நாதாந்த நவமணியே நற்றவமாமணியே நடனசிகாமணியென்றாள் நடிக்கின்றமணியே, வாதாந்த சமயநெறி மதவெறிக்கு மப்பால் விளங்குகின்ற வன்பருளாம் மறித்திருக்கு மணியே, சூதாந்தக் கண்ணொளிசூழ்நிறை ரமண சுத்தசிவ குருமணியென் குறைதீர்க்கு மணியே. (6)

சிவசக்தி நிலைவிளங்கச் சத்வகுணம் விளங்கச் சித்திநிலைத் தாம்விளங்க சிந்தையில் ஞானானு, பவம்விளங்க உண்மைநிலை பாரெல்லாம் விளங்கப் பண்பாடும் திறம்விளங்கப் பதிநிலையும் விளங்கத், தவமாகும் கொழுந்துசிவ துரியநிலை விளங்கத் தத்வமஸி யன்புநிலை தேங்கியது விளங்க, நவநிதியாம் சிகரநிலை நாட்டமது விளங்க நானதுவாய் விளங்கவருள் நாயகனே ரமணா. [7]

அங்கமெலா மின்பமுள வன்பே யாகி ஆங்குளதென் நீங்குளதென் றலைவுறாமல், சங்கமெலா நிறைவாகிச் சார்ந்து நின்று சந்ததமாய் நிற்குமுனைச் சார வேண்டும், சங்கற்ப விகற்பமுறும் மனமுங் காணாச் சங்கிக்கு மாந்தருமே தேடிக் காணாத், தங்கமெனத் தவழ்ந்திலங்கும் தயவுள் ளோமே தன்மைநிலைச் சின்மயனாம் ரமண தேவே [8]

சுந்தரர்க்குத் திருச்சுழியில் சுதனுதித்த திறத்தைத் துதித்திடவே வாய்மணக்கு முள்ளமெலா மணக்கும், அந்தரத்திலுள் மணக்கும் அன்புமிக மணக்கும் அம்பலமா முள்ளநிலை வஸ்துவது மணக்கும், உந்தரத்தால் யோகியர்த முள்ளகுகை மணக்கும் உண்மைநிலை மதிமணக்கும் மதிக்கப்பால் நிற்கும், தந்திரத்தால் பாமணக்கும் தத்துவமே கடந்த தபசியராம் ரமணமுனி நான் மணக்கின்றேன். [9]

அருள்நிறைவே யருள்நிறைந்த வருள்வடிவப் பொருளே அன்பர்குறை முடிக்கின்ற வின்பநிறை யமுதே, மருள் நீக்கி புன்மைநிலை யுறக்கொண்டபதியே மனக்கின்ற மெய்த்தார்கள் மருவு மருள்நிதியே, பொருள் நிறைந்து பொலிகின்ற புண்ணியனே மன்றுள் பொங்கிநிதம் வழிகின்ற புத்தமுதத் தேனே, இருள்கடிந் தென்னுளமதனிலி ருக்கின்ற வரசே யியல்புநிலை குருமணே யெங்ஙனம் நான் புகுவேன். [10]

காணுகின்ற பலவுருவக் காட்சி யாகிக் கடல்மலையாய்க் கலைபதுவாய்க் கலந்து நின்று, மாறுறவின் புகழாகி மற்று மாகி மகிமைநிலை யுயிர்க்குயிரா யொளிதாணுகிர், நானு வதாய்ப் பரம்பொருளாய்த் தனியே யாகித் தற்பாஞய்ச் சின்மயனாய்ச் சாட்சி யாகிப், பூணுவதாய் நின்றிலங்கும் மெனுவுன்னபூரணமே புண்ணியர்கள் புகழும்தேவே, [11]

கருணைமழை பொழிகின்ற கடவுள் தன்னைக் கதிபெ றவே யானுளத்தில் காணவேண்டிக், குருமணி பதியெ னவோ குன்றே மோனக் குரவனெனக் குறிப்பிடவோ குறி த்தேமற்றும், பொருளாகும் சாஸ்திரத்தின் புனிதனென் றே பொருந்திநேற் றுபெய்ந்ரே தகப்பனென்றே, அரு ளொளிநிலை யருளென்றே யன்பனென்றே யாவும் நீ யொன் றெனவே யழைப்பே னந்தோ. [12]

எல்லையிலாப் போதமதா யியங்குகின்ற சிவமே யென் னறிவி னூறுகின்ற வின்பநிறை யமுதே, தொல்லையெலா மறுகாமல் தொலைத்திடவே யடிமை தொண்டுசெயக் கிடக் கின்றேன் சிறியேனென் குற்றச், சொல்லையெலாம் குண மாகக் கொண்டிட்ட நிதியே யுதாகும் ஞானவெளி சாந்த நிலை வாழ்வு, வல்லையென வருந்தாமல் வாழும் நாளுளதோ வன்னைமணி யருணமலை வளர் மௌன தேவே, [13]

இரும்புநிகர் மனத்தினனு னேழையனுன் ஞான வின்பநிலை யறிந்திடவே யாவல்மிகக் கொண்ட, தரும்பில் மிகச் சிறியேனுன் றயரடைந்தே னையே துணையாக நினையடைந்து துணிந்துமிகப் பிடித்தேன், திரும்பியெனைமயக்கி விடும் வஞ்சபுல னைந்தும் திருத்தமுற மிகவடைந்துந் திருந்தியெனைக் கொண்டு, கரும்புரச வன்பூறக் களிகொளுமா றெனக்கு காட்சியா முபசாந்தம் கொடுத்தருள்கதேவே [14]

சிவவடிவம் நம்வடிவம் சிகரநிலை தழுவி சித்தியெலாம் பெறும்வடிவம் சித்தநிறைந் தொளிரும், தவவடிவம் நம்வடிவம் தான்தானே யதுவாய் தத்வமஸி போதிக்கும் தொம்பதத்தின் வடிவம், பவநீக்கு மெய்ஞ்ஞானப் பரஞ்சோதி யென்று பலகலையு மெடுத்தோதப் பரிவுடனே கேட்டும், சவம்போல திரிகின்றேன் சாரும்நிலை யறியேன் தவநிலையை ரமணபதி தந்தருள்க தேவே. [15]

நின்னருளாம் நிதிவேண்டும் நினைபக்தி செய்யும் நித்தியரின் நேயமதே வேண்டுநின்றேன் நாளும், பொன்னடியை வேண்டிமிகப் போற்றவும்நான் வேண்டும் போராடு மாயையினைப் புதைத்திடவும் வேண்டும், கன்னியரின் காதலினைக் கனவிலுநும் காணுக் காட்சியினை நானடைந்து களிப்புறுதல் வேண்டும், அன்பதனுல் சிவனுக்குள் சிவமணமே யாக அருளவளர் ரமணபதி யாண்டருள்க தேவே, [16]

என்னுடைய மனையகத்தே நின்றுலாவு மென்னரசே யென்தாயே யென்னசெய்வே, னுன்னுடைய திருவடியை யுன்னிநாளு முற்றதவ மெய்வருந்தி யுருகிப்பாடித், தன்னிலைமை யுணர்ந்தறியாப் பாவியர்தோ தலைவறுனைத் தாய்காணுக் குழவிபோல, யின்னுமிக வுருகுகின்றே னேழையைநீ யிரக்கியருள் கூர்ந்திடுக ரமணதேவே. [17]

உன்னைமதிலை சிறிதேனு முணராப்பேதை யுன்பதாவு
முறங்குவதங் கண்டேமேலும், வல்லமுலை மாதரிடமவர்
கட்கேற்ப வளர்கலவிப் பேய்ச்சாத்தி வாழ்ந்தேனல்லால்,
நன்கதிரம் தன்னைமதிலை தன்னிலதின்று சிறிதேனு மறிவு
பெறாச் சிறியோனென்னைக், கொண்டுகுலக் குறிப்பதாவு
நீதியல்ல குறைநீக்கும் குஞ்சரமாம் ரமணதேவே, [18]

என்சா றுடம்பத்வு மோர்பிடியாய்க் குன்றி எற்ப
நிகழ் பெருபெரியோர் வாக்கிறுக்கு நேராய், பண்புடன்
யான் சென்றிரவாப் பரிசதுவும் பின்றும் பரிவுடன்வந் திரப்
போருக் கில்லையெனாததுவும், வின்சாரு மூனிபுங்க குற
வுதவும் வேண்டும் விமலாவின் புகழ்நனையே பேசிடவும்
வேண்டும், பண்சாரு நிலையதனில் நின்றிடவும் வேண்டும்
பசாறிய சமிர்தனிலை யருள்ரமண தேவே. (19)

நின்பாலே நின்றிலங்கு மினத்தின்மிக சந்தா விருவி
னையின் விளங்காலும் சங்கற்ப சித்தா, லென்பாலு நிணங்
குருதி நிறைந்ததசைச் சுவரா லெல்லவரு மதிக்கரிய வென்
குடிலி லமர்ந்த, அன்பாலே யுனையறியா திருட்டறையி
லெனையே அம்பில்மிக வம்புசெயு மாட்டரெலாம் கூடி,
என்பாலே வம்படிக்கக் குரங்கின்கை மாலை எனவுளமே
போகின்றே னென்செய்வேன் ரமணா. (20)

மர்க்கடத்தின் குருளையென மாறுதன்னை மகிமை
பெறப் பிடித்திடவே மார்க்கங்காணு, தர்க்கமிகப் பேசிடு
வேன் தாசனுமேன் நடித்தமனமிகவுடையேன் தஞ்சமென்
றேன், வர்க்கநிலை மார்ஜ்ஜாலச் சேயேயாக வளமைபெற
வென்றனையே வாகாய்க்காத்து, மர்க்கடமா யலைமனதை
நிலையிற்சேர்ப்பீர் மஞ்சளையு மருளை பார்ரமணா தேவே [21]

ஆணிலே பெண் ணலியிலே மற் றவரிலே யென்
போலவே, காணிலேனதி பாவியாகுமிக் கசடனுகிய பேதை
யேன், பேணிலேன் குரு வானநின்னடி பிழைபொறுத்தரு
மே யென்றனின், ராணிமாயையை விட்டகற்றிட ரமண
தேசிகவருளவே. (22)

வான்மாறினும் மறைமாறினும் மதி கதிரோன்
தான்மாறினும் பாந்தாமன்பாதம் தனிலடியேன் நான்
மாறிடாத தவத்தையருளிநீ ஞானதுவாய்த் தேன்மாரிபெய்
யும் வழியே ரமண தெரிவிப்பையே. (23)

கந்தையுடல் கொடுத்திட்ட கருணைத்தேவே கதிபெற
நான் காணவிலை கலந்தேயேற, விந்தையதா யடைந்திடவே
விருப்பங்கொண்டால் மிகச்செல்லும் பொறிபுலன்கள், மந்
தையெல்லாம், சொந்தமுட னந்தவழி யுதாயேகச் சோர்
க்கவிலை காணுமல் சுணங்குகின்றேன், தந்தையனே யென்
றனுடைப் புந்திதன்னை தளராதுன் னிலைசேர்ப்பாய் ரமண
தேவே. [24]

கல்வியிலை முழுதுணர்ந்துங் கற்றோமென்று கர்வம
தால் தாமுரைத்த வாக்கேமெய்யாய், பல்விதமா யாவரோ
டும் வாதேசெய்வார் பாமுணரா ரவரொடுயான் சேரவண்
ணம், தொல்புவியி லருளொன்றும் பரமவித்தே துணையாக
நினையடைந்த துட்டனுமென், வல்வினையாந் துடக்கறுத்துன்
னடியாராகும் மாதவரி னடியேத்த வருள்செய்வாயே. [25]

வெளிமுதலாம் பூதமதாய்ப் பலவாநின்று விரிந்தொளி
ரும் சித்திரங்க ளான்மகோடி, ஒளிமுதலா யிருளீறுங் கால
தேசம் உலப்பில்லா விறப்புபிறப் பாகுமற்றும், தெளிதரு
மிப் வகையாகி யுதித்துக்காணத் திகழ்த்துபின் னகின்ற
விபரம்சொல்வீர், களிகொன்னும் ரமணமுனிச் சடைவாரே
கரையில்லாச் சிவபோகத் தேவதேவே. [26]

உள்ளாகி மேல்கீழாய்ப் புறம்பேயெங்கும் ஒப்பரிய செம்பொருளொன் றுண்டேயென்று, தெள்ளியதா மறைகளெலாந் தெரியவைத்தும் திருசியம்பின் றோன்றுகின்ற வகைதானென்னே, கள்ளமிலா மாயையதைக் கடிதமாகக் கற்பித்த தெவராவர் கழறவேண்டும், உள்ளமிலே தனியொளி யிரு முண்மையுணரா வுத்தமரே குருரமண தேவதேவே. [27]

திக்கொடுதி சைகளண்ட கோடியெல்லாந் திகழ்ந்திடுச ராசரமாந் திருசியங்கள், விக்கினமொன் றில்லாது பகிர்மு கத்தில் விளங்குவதா லகமுகமே நோக்கி நின்றால், அங்க ணெம்ம னின்றிடுமோ வுறைய வேண்டும் அன்பருளாம் தங்கு கின்ற வின்ப மாகி, எக்கணமு மெங்கணுமு மெழிலாய்த் தங்கு மிறையவனுங் குருரமண தேவ தேவே. [28]

குலமோடு குணக்குறியுங் குறைவும் யாவுங் கூறிடுமைம் புலன்பொறியும் வாதாருஞ் சகுஞ், சலமோடு விருப்புவெறுப் பிவையுமாருஞ் சவியங்கள் போக்குவர வின்றி நின்ற, அலை வில்லா பொருளிலிவை வந்தவாறும் அடிமைக்கு விளம்ப ரமா யருள வேண்டும், சலனமதே கண்காணுஞ் சர்வ ஜீவ சாட்சியிலே யிருக்கின்ற ரமண தேவே. (29)

இறந்திடவே வகைகாணாத் துயரில்நின்ற துப்புநிலை யறியாத துரும்பனுமி, மறந்துமிகத் திரிகின்ற மடமையான வன்மனமே மிகவுடைய வஞ்சனெஞ்சேன், இறந்திடவும் வகையறியே னென்னசெய்வேன் வழுமதி மிகவுடையே னேற்குசெய்வேன், சிறந்தொளிரும் ரமணிய சிவனேயென் றன் சித்தமதை யோர்நிலையில் சிக்கவைப்பாய். (30)

நிட்டையிலே நின்றொளிரும் நிதியேஞான நிர்த்த மிடும் குருரமண கோனே காம, வெட்டையிலே 'யென்றுளும் கலங்கி நாயேன் வெந்தியால் வெந்துருகு மாசா பாசக், குட்டையிலே குணங்கெட்ட வெருமை சென்று குழப்பிசகம் பெற்றதுபோல் குறித்தே னல்லால், முட்டையிலே கருவிருக்கு முறைமை போல மோனநிலை யுள்ளுணர்வை யறியே னந்தோ. [31]

வாடிநான் தவம்செய்யும் வகையறியா வெனையே வழி காட்டி யொருசொல்லால் மோனநிலை கூட்டி, மாடிநிலை யேற்றுவித்த மாரமண பதியே மனத்தப்பால் மணக்கின்ற துரியநிலைக் குருவே, பாடியுன்ற னன்புநிலைப் பண்பறியாப் பேதை பதிபாச பசுநிலையை பகரவொணு தேனே, தேடினா லின்பமுறத் தனித்தநிலை சேரத் தடித்தமன துடையெனை தடுத்தாட் கொண்டாய். (32)

மதிக்கரிய சித்ரமணி மண்டபத்தில் மதிக்கப்பால் விளங்குகின்ற மதியேயுன்னைப், பதித்துநிலை நாட்டாத பாவியந்தோ. பறக்கின்ற வெளவாலைப் பரிந்துவைத்தே, உதிக்குமிக நாற்றத்தை யுற்றேனல்லால் உனைநாட்டி யுளங் களிக்க வருகிமேலும், அதித்துநிலை நிற்கறியாத் துஷ்டனு னேன் துணையாக ரமணவுனைத் துணிந்துகொண்டேன் [33]

சாதிமதக் குறும்புநிலைச் சழக்குளாராய்த் தர்க்க சாஸ்திரத்தில் வம்படிக்கும் சாதுக்களை யறிவோம், கோதில்லா வீசனையே குறித்துநிலை நிற்காக் கோணல்பல பேசிவெர் கூத்தனையுங் கண்டோம், வாதிக்கு மமதையிலுல் வன்மைநிலை காணு வசைபேசும் வசனமுனா வார்த்திகருங்கண்டோம், மேதினியா ரருளையினில் மேவுகின்ற ரமணர் மோனநிலைத் திருவுளத்தின் கருத்தறியக் காணோம். (34)

தவம்செய்து பெற்றெடுத்த தாயேயல்லால் தனிமை யுறம் செயதற்கு துணைகாளுப்போல், பவமறக்கு முனை யன்றிப் பாரோரெல்லாம் பலவிதத்து மல்லல்மிலை கூட்டி. மைத்துங், கவலையிரும் நாடகத்தைக் காணவைப்பார் கருத் தரித்து கவலையிலை கருதாவண்ணம், பவனிலது கதிசேர்த் தப் பதியேயாக பலரெவரும் துணையாகார் ரமணதேவே(35]

போகமெலா மறுபோக மாகக்கொள வறியேன் பொலி வுடனே புழைத்துமிகப் பொருந்திடுவேன் மாயா, மோகமதி லறுபோக முயன்றிடுவேன் பேதை மோகினியின் வேதாந்த முழுங்கிடுவேன் சப்த, மேகமெனப் பொளபொளென மண் விண்ணும் தகர மேதினியில் வந்ததொரு வகையறியேன் கேட்டா, லேகமென வறியாமல் பல்லமிக விளிப்பே னெங் இமிகத் தவித்திடுவே னென்செய்வேன் ரமணா. [36]

கண்ணப்பன் தனையொப்ப அன்பதனால் மேலும் கண் ணதனை ஒருமையுடன் கனிவுடனே வைக்கேன், வன்னை முன சிறுத்தொண்டர் மடைப்பனியில் மகனை வஞ்சகமாய்க் கொன்றதுவனி வில்லவிறன் மிண்டர், என்னம்போல் தன் காலைத் துண்டுசெயமாட்டேன் யிளைமைநிலைத் திருநிலர் நின்றநிலை நிற்கேன், அன்னவடி யருணைவளர் குருரமண னேவே அன்பதனு லுய்யும்வகை அறிவிலி நானறியேன்[37]

உயர்வான விருந்தெங்கே யுண்பதனுக் கினிய வுண வெங்கே பருப்பொடுசெய் சோறெங்கே மிக்க, வயிரேங்கப் பொரியலொடு வறவல்மிகு மானம வடையெங்கே மிட்டாய் தேன் குழவெங்கே யல்வாப், பெயராகும் பாங்கான பாத் தேங்கே கமருர் பாகெங்கே யின்றுமுனை விடமில்லை யெ ன்றே, துயர்கொண்டே எவ்வாதோர் சிறிதுமுனை நினை யேன் துரியநிலை சிவகுருவே ரமணபதி தேவே. [38]

படிப்பித்தால் ஞானநிலை படித்திடுவே னென்னைப் படிக்கவகை செய்தவனைப் பரிந்துமிக வுணரேன், குடிப்பித்தால் ஞானரசங் குமட்டாமல் குடிப்பேன் குவலயத்தில் குணங்கெட்ட குடியரையாறுடேன், நடிப்பித்தால் நடித்திடுவேன் நானடிக்க மாட்டேன் நடித்தவனு நான்றுரேனு நாயகனே வறியேன், பிடிப்பித்தா லுன்னருளைப் பிசகாது பிடிப்பேன் பிடித்தவனை நானறியேன் பித்துநிலை ரமணா. (39)

அன்னையவள் கருப்பையி லார்ப்புண்ணல்மற் றறல் மிருத லுதரவழ லாலமுங்கல், மன்னுகின்ற வாதமது மோதல்யோனி மர்மநெருக் குணல்வகையே கஷ்டம்கஷ்ட, மின்னவித வாதையெலா மணுகாதென்னை யீடேற்றி யென்றனையே காத்துநின்றன், சென்னிநிலை சேர்ப்பதுவே யுன்றன்பாரம் சிறியேனுன் ரமணபதி போற்றிபோற்றி. [40]

பந்தமதே யாறுகாமல் பரவஞானப் பரிதிநிலை பயில்பவரின் படியின்மேலே, தொந்தமதா யெத்தனைவிநாதம்தோன்றித் தொடர்ந்தாலும் தான்பிடித்த நிலையில்நின்ற, சந்தமதைச்சார்ந்திடவே முயல்வாரல்லால் சகசநிலை தவிர்வாரோ சாற்றுவாய்நீ, சிந்தனைக்கு மெட்டாத சிவமேயாகிச் சிறந்தொளிரும் ரமணபதி தேவதேவே. [41]

ஞானமதை யடைந்திடவே ஞாலமெல்லாம் ஞானிபோலலைவார்கள் ஞாயம்ஞாயம், பானமதை மானமறப் பருகிமேலும் பகரவொரு வினைநிலைப் பாவையாசை, ஊனநிலை சேர்ப்பிக்கு முன்மையுண்மை உயர்நிலையா மோனவெளி சேரவேண்டின், மானவழி மானமெலாம் மதிக்காதே அருணகிரி ரமணநிலை யமரவேண்டும். [42]

கலியெலாம் போக்கிடவே கருதாதும்மை கருத்த
நளி ரருளிடம் கொண்டிடாமல், அவலமுறில் கொண்டு
விடும் யோனிநிமி பாதைபதே யசற்குரிய அணியேயாகும்
வைராக்ய மறியாமல் வனித்துமேயிச் சுவர்பிளர்ந்த யாத்திரை
யில் காலிட்டாங்கே, பவமடைய லுப்பதனை யசைத்தழுகம்,
பட்டதுயர் பற்றிடுவார் ரமணதேவே. [43]

சிற்றிடையர் மாதர்சிறு குழியின்பாம்பு சினைத்துமிகத்
தீண்டியதால் விஷமேயேறி, யுற்றதொரு பாதமுதல் சிர
சம்பற்றி யுணர்வறியாப் பெருமயக்க மடைந்தேனல்லால்,
மற்றதொரு வகையறியா வஞ்சநெஞ்சேன் வளர்கின்ற வன்
பிறவி மாற்றவல்ல, நற்றவராம் குருரமண நாதன்றானாம்
நன்மூலி சஞ்சீவி வேண்டாநின்றேன். [44]

தந்தியதே யில்லாமல் தாணிபிலே யறிவோம் தந்தொ
ளிமை விந்தையதாய்த் தகரமதி லடைப்போம், உந்தியிலே
மந்திரமா யுருவமதா பெடுப்போம் உருவிலே சுந்தரமாய்
நடமும் செய்வோம், இந்திரனைப் போல்வானில் ஓடிமிகத்
திரிவோம் நினைவில்லா மனத்தின்செய லிருக்குமிலே யறி
யோம், பந்த மிலே வன்கயிறும் பாசமிலேயறியோம் பதியாகும்
ஸ்வரமது பாசமற லவயே. (45)

அரும்புமலர் காய்க்கனியா மறிவிலின்று யடியவரைப்
பணித்தறிடாப் பாவிநானே, குறும்புபல பேசிடுவார் கூட்டம்
சார்ந்து குரங்கின்கை மாலையெனக் குலைந்துநின்று, கரும்
பிம்பமு குசித்திடுமாம் கிலையைச்சாரக் கறங்கெனவே யுழன்
றாத மனதின்போக்கில், திரும்புவகைத் திறமறியாத் திகைத்
திருக்கின்றேன் திருத்தியெனை யாட்கொள்ளும் ரமண
தேவே. [46

இதிகாச புராணமுறை யறிந்திடுவோ மிங்கே யினை யில்லா வாகமத்தி லிருந்ததிலை யறிவோம், பதியான வேத மதின் பண்பறிவோம் பாரிற் பகர்கின்ற வுபநிடத முறையறி வோம் பரிந்து, சதிசெய்யு மனத்தினது சாலத்தை யறி வோம் சற்றேனு முற்றதிலை சார்ந்திடவு மறியோம், நிதி யாகு முன்றனருள் நிலைநிற்க வறியோம் நித்தியனே ரமண முனி நிபுணமணி தேவே. (47)

கோதாகு மிச்சையெனுங் கோட்டான்கள் கூடிக் கோ ணல்பல வியக்குறவுங் குறித்ததிலை சற்றா, வாதாகு யோகமெனும் வன்கொடுமைப் பேயும் வஞ்சகனும் டம்பனெ னும் வகையறியார் மேவச், சூதாகு மதமென்னும் சனங்க ளவன் கூடிச்சுழலுகின்ற பாவியனேன் துயரடைந்து வாடி, ஏதாகு மோவென்றே றுள்ளமெலாம் நொந்தேன் எனை காக்க வாதாரா ரமணமுனி தேவே. [48]

ஜீவனெனு மணமகனைச் சேர்ந்திடவின் றறியாச் சிற்றறி வுமிகவுடைய மனோவதியாம் சிறுமி, மேவவொரு வாட்சிதனை மேற்கொண்டு தன்னை வேண்டிவரும் மெய்க்காவர் சகோதர ரின்நேச, பாவனையாம் பாசமதால் பண்பறியாள் சென்று பலவிதமா மஞ்ஞான ஜென்மமதை யடையத், தாவிவரும் பிணிநாற்றம் சகிக்க மிகமாட்டேன் தாவாம லோடிடவே மணபதி செய்க. 49

ஆசையெனும் தாய்க்கிழவி சளுக்குமிகக்கூற அச்சமட ம்நாணமிலை பயிர்ப்பறியா மோக, வேசையெனு மங்கை யவள் பாட்டு மிகச்செய்ய மேதையிலா மனோவதியு மிழ்ந் தன்றனருளாக், காசையெலாங் கொள்ளை கொள வசதத் திற்பந்தல் காணுன்றிக் கேளிக்கை காட்டுகிறாள் தோ,றுசை யதா னாம்வாடிக் கருத்தழிந்த சகுதி புனைபடையக்கூடுமெ ன்றெனருள் ரமணதேவே. 50

பொங்குமருள் திதியுனையே போற்றுதேகிப் பொய்யுலக வாழ்வதனிற் போக்கில் திற்ற, கங்குல் கறை கன்னியரின் மாயையெல்லாம் கர்த்தரென வெள்ளகளுங் கலக்கஞ் செய்ய, மங்குகிறேன் முங்குகிறேன் மனமேமதாமேனன் மறந்தனையோ மாதிதியே மதிமைக்கோனே, எங்கு நிறை சின்மயனே யென்ன செய்வேன் என்னமதில் நிறைந்தருளும் ரமண தேவே. 51.

சிகரநிலைச் சிற்பரனும் சின்மயனொக்காணச் சிந்தையதை யொருநிலையில் சிதறாமல் வைக்கத், திசமுமனங் கருக்கெனுமோர் நியமெவாவிசேழ்க்கத் திருத்தமுறு மவ்வொலியை லத்திரமாகவுன்றி, வொகாரமிக ரணாங்கின்னை யணியொளியே யென்ற வுருவமிக்க சற்பித்தே யுருவிமிக நிற்கும், பகரவொரு வம்மனத்தின் செயலதையேயானும், பார்த்தடக்க முடியாது பாரமணதேவே. 52.

ஆசில்லா நெறியினையே யன்பரெல்லாம் அகமதனில் கொண்டுமித மாழ்ந்துகின்றர், பாசநிலை தனில் நின்றபாமே ரெல்லாம் பாழதனி லுழைத்திங்கே பரமேகாளுர், மோசநிலைகாண்பிக்கு மனமதைக்கொல்ல மோனமதா ஞானநிலை மூட்டிவைப்பாய் வரசமதால் நிறைந்தருளு மன்பேஞான வணியனியம் ரமணமணி தேவ தேவே. 53.

மரண நிலை யுடலியக்க மூளைந்து நிற்கும் மாலதுவாம் சாக்கிரதநின் வாதைபின்றும், காரண நிலை யுள்ளிலங்கிக்கலந்துநிற்கும் கனவினிலை மனமதனின் வாதைமேலும், பரணநிலை பார்த்தறியாப் பாழ்சமுத்தி பகரவொணுத் துன்ப நிலை பார்க்கவைக்கும் குறிகுணங்க ளற்றிடவே குறியி லென்னைக் குஞ்சரமாம் ரமண முனி கூட்டிவைப்பாய். 54.

மூடமனம் பொறிபுலனுல் மூடாவண்ணம் மோன நிலை ஞானவழி மூட்டிவைத்து காடுகின்ற மும்மலத்தை நசுக்கிப் போட்டு ஞானிலத்தில் விளங்கி நிற்கும் ஞானே ஞானும், கூடரிலை குறித்துநிற்கும் ஜீவசாக்ஷிகுற்றமற்ற குண மதனில் கூட்டிவைக்கச், சேர்க்கொண்ட ரமணபதிச்செல்வா வென் சிந்தையதை யுன்றுநிலைசேர்க்க வேணும். 55.

உலகெல்லா மொருக்கொத்தி லோடியாடி யுழலு மென் மனதின்வலி யென்னசொல்வேன் பலவழியு மெனைக் கொண்டு பாவஞ் செய்து பத்திக்கேயோர்வழியில் பதியாவண்ணங்கலகமிக செய்கின்ற கள்வன் றன்னைக் கண்டிடவே யுனது வழி கருணைகூர்ந்து நிலகதிலே சேர்த்திடவே நிசைனபக்காட்டித திருத்தியெனை யாட்கொள்ளும் ரமணதேவே. 56

அம்பலத்தே யாடுகின்ற அருமறையி னருளோ அன்பருளம் தங்குகின்ற வின்பநிலை சின்சிதம்பரத்தே வேறு நிலை தன்னையன்றி யிலதாய்த் தத்துவமா நடிக்கின்ற தனித்தலைவாவிங்கு பம்பரம்போல் பறக்குமிகப் பாவி மனம் பண்பாய் பறவையினு மதிவேக முழன்று மிகச்சென்று உம்பரத்தி லடங்குவதைக் கண்காண ஆசை உத்தமனே சற்குருவே யுண்மை நிலைத்தேவே, 57,

சுறங்கெனவே யுறங்காமல் கவலைகொண்ட கடுமோக மனமென்னும் மன்னுபேரு, பிறங்கலெனப் பெண்ணுகும் பேயை சார்ந்து பிரியமதாய்த்திரிகின்ற பித்தின் நேர்மை துறந்திடுநீ துகிலணியும் குருதி யென்பு தசைவாகும் புழுத்த மலக்கூடென்றெண்ணி மறந்திடுதி பிராந்தியதால் மயக்குறாமல் மதிபெருக ரமணமுனி மன்றுள் சேர்வாய், 58,

அஞ்சலென வந்தவரை யருளல்வேண்டி அருளரசு ரமணமுனி யமுதனைத்தேவர் பஞ்சமதேயனுகாமல் பார்ப்பாரங்கோ பதறுதே சிதறுதே படிநதுநில்லு துஞ்சலது மடையாதே துணிந்து நில்லு துக்கமெலாம் போக்கிடவே துரையிருக்க நெஞ்சகமே யஞ்சாதே நிமலன் றனில் நிமிடமது தவறாமல் நின்றிடாயே. 59.

போதையினு லிருண்மூடிப்போகும்வகையறியாப் பொய்பேசித்திரிந்திட்ட பாவியானுன் மோகவாதையினுல் மானெனவே வலையதனில் சிக்கி வருந்திய நான்வன்மைபெற வழி காணும் ஞானச்சுடரை மெயலாம் வெளியாக்கி குசலையா மோன சுத்தசிவ பரவெளியின் சத்துநிலை ரமணன், பாதையெலாம் பார்த்திடவே பட்சமதா லெனக்குப் பாங்காக வரித்திட்டார் பருவ நிலை கு. ரித்தே. 60

மனமென்னும் மதகளிறன் மதியைக்கெட்டு மாண்பு ள்ளமாமதியாம் மணியைச் சாராள், மனமென்ன திரித் தவிக்கச் சலாவதி நின்று குதாக மோனஹரமெனும்பதில் சென்று, இவனாகும் வருந்தியா மிருள்மச் சார்ந்தேகவிற க்குடிலும் பிணிபதனைக் கினமேகண்டும், வனமதனில் திரிகின்ற வக்தோ வங்கேதோ வழிகாலோ வுன்னடியை வ ணங்கி நிற்கேன். 61

மலமோகனும் பிறைப்போனும் மாலவனும் மற்றும் மாதவரும் வேதமுதனுபட்டத மிருப்பப், புனிதமும்ப ன்னுளாய்ப் பார்த்திடவே தேடப் பகரமொரு ஞான வாசிட்டமத முற்றாத், சொலவரிய சின்மயனைக் கூட் டமைப்க்காலச் சோராமல் தகிருவமும் மூழ்கி நிதம் பார்த்தும, தலங்களிலும் கன்காணு தேங்கமிக வுள்ள தலைவனையே காணவைத்தார் தலைவர் புகழ் ரமணர். 62

தாவமாமென வோடிடும் மனத் தரத்தை பள்ளதி கண்டிடல், மேவுருமலே புள்ளடங்கியே மேவுஞ் செய லற்றின்றிடும், பாவமாமனைப் போக்கிலின்றிடல் பறக் கும் பஞ்செனை வழுவாய்ந்துவுதல்கல மென்றெமக்குமு ரைத்த தன்னிதி ரமணனே. 63.

ஆங்காரத் தற்போத வலமதா மற்றவ்வாளைவமா மாமாயை யடியோடுதன்னி, ஓங்கார வடிவமிதி லைபாரு மறியா தற்றொரு சங்கற்ப விகற்பமுமங்கலையை, வர க்காத பாக்குள்ள மோனநிலையுற்று வழிகாணத் தரிய நிலை வன்படவே கொண்டே, எங்காமல் பரவெளியிலே மூழ்கி நிற்க இறைவனும் ரமணமுனி யெனக்கருள நின்றேன். 64.

சோறிட்டுச் சொர்க்க மதைக் காட்டுவான் போற்
சொல்லுகின்ற பலர்சொல்லைச் சூதாய்க் காணு, மேறிட்டு
மறியாத வேழையந்தோ வீடேற வெண்ணி யெனை
யநுபவத்தில் நேரிட்டுக் கண்டிடவே நிமலன் றனில்
நித்தியமா யடைந்திடவே நீயுமன்றி மோரிட்டு மற
வகையோ டன்ன மீந்து மோட்ச நிலை யறிவித்தாய்
ரமணா முத்தே 65.

வேண்டுமென விரும்புவார்க் குணவை யீயும் விரு
ப்பமுட னளிக்காமல் விரைந்துமேவி, வேண்டாமென்
றனுதினமும் விருப்பம் நீக்கி வித்தகமா மோர்நிலையில்
விளங்குவோர்க்கு, வேண்டிமிகக் கொடுத்திடுநின் றயத்
தாமென்னே மேதினியி லவர்களுமே மேவிடாமல்.
மீண்டிடவே வஞ்சகமாய் முயற்சி செய்யும் மெய்ம்மை
யிது குருரமணா முனியின்றுதே. 66

ஆணிப்பொன் னம்பலத்தி லமருகின்ற அன்புநி
லையதாகும் மனதேநீயும், கேணியிலே மௌன மதைக்
கவரவேண்டிக் கெட்டிடுநீ செத்திடுநீ கேவலந்தான்
எனிநீயே யேறியநீ யேங்காதேசுக எண்ணமெலாம் வண்
ணமதா யிசையவன்றன் காணியதாம் காட்சி யதைக்
காட்டுவாரே கருத்திலமர் ரமணமணிக் கடவுளாரே 67,

காட்சியெலாங் கண்டுமிகக் கதியே யேறக் கருத்
ததனில் நிருத்தமிடும் கடவு ளுன்னை, ஆட்சியதாக்
கொண்டிடவே யன்பே யாகும் அருமையுள மருந்ததனை
யே யருந்தும் யோக, நீட்சியதா லனுபவமே நிலைத்து
நிற்க நின்னருளா மஃமோன வெளியிலுன்றன். மாட்சி
யெலாம் வெளியாகும் மருளே போக்கும் மாநிதியாம்
ரமணமுனி மணியே கோவே. 68

யானைகண்ட குருடர்போ லகிலமெங்கு மலைவரு
மே மதவெறியி லாழ்ந்து நின்று, கோணமிகக் கண்
காணுங் குருடராகிக் குலைந்துநிலை போர்புரிவர் கண்
டார் போதும், வாலைபொரு பான்தாவும் வகையைப்
போல வழிதப்பி வகைகாணாப் பாவியானோர், சோலை
யென வருவன்மாரி சொரிந் திலக்கும் குட்சநிலை சூழ்ந்
தறியார் ரமணதேவே. 69.

கடைந்தெடுத்த நவநீதங் கலந்திடுமோ மோரில்
கலவாது மிதந்துவிடுந் தன்மைபெறா ஞான, மடைந்
திட்டேன் பிரமனினிப் பிறப்பிக்க வாகா னவன்பட்ட
குட்டதனை மறப்பானோ பின்னு, மடைந்திட்டே புதை
பட்ட காலனவ னென்னை யிறப்பிக்க வல்லவனோ யிதெ
வரின் குதால், முடைந்திட்ட தெளிவினில் மாயை
யெலாங் கடந்து மோனகதி நின்றிலங்கும மாரமணர்
மகிமை. 70.

வேதாந்த சாஸ்திரங்கள் மிகவும் கற்றும் மேதினி
யை சத்தென்றே மிரண்டு நம்பும் வாதாகும் சமுக்கறு
த்து வருத்தம்போக்கி வன்மைபெறும் தத்து வத்தின்
வழியைக்காட்டி மோகாந்த வழிநீக்கி முழுதுங் கான
மோனநிலை தெரிவித்தாய் மனிதனாக நாதாந்த நிலைக்
கப்பால் நிலைத்துநிற்கும் நவநிதியாம் குருரமண பதி
யேபோற்றி- 71

தலைவ னெனும் பொய்யாகும் தகப்பனுக்கும்
தலைகாணுமாமாயைத் தாயாருக்கு, மலையில்மிகு புவன
மெனுமரும்புதல்வ னவதரித்து மெய்யெனவே விளங்
கினாலும், கலைபயிலுஞானத்தால்கனிந்துபார்க்கக் கடை
யினிலே மித்தையதாம் காணச்சொன்னீர், விலையில்லா
மாணிக்க மிந்தச்சொல்லை விலக்குவனோ வினைதீர்க்கும்
ரமணதேவே. 72

அளக்கறியா நிலையமர்ந்த வருளே யுன்னை அறிந்
திடவே தான்வேண்டி லகண்டாகார, துளக்க நிலைதனி
லிருந்து துடித்தா லல்லால் துரியநிலை மேவிடவே தோ
ன்றுதென்றும், வுளக்கமல மனத்தினிலை வாக்கினாலே
யுரைத்துநிதம் புரண்டாலும் விளங்காதென்றும் விள
க்கமுறத் தெரிவித்த வின்னோயுன்னை மேவிடவே வே
ண்டுகின்றேன் ரமண தேவே. 73.

* சிந்தையினை மயக்கிமச் சிற்றிடையர் தடமதனில்
பந்தமதால் பாவியனுன் பலகாலும் பரதவித்தேன், தந்
தைநீ யென்றுனுக்குத் தயவுடனே தத்வமஸி விந்தை
யதை விருப்பமுற விரிவாக வெடுத்தோதிக், குந்திநித
மருள்பெறவே குறிந்துநிலை நின்றிடவே முந்திவருங்
கனவினிலும் முடுகிநிற்கும் நனவினிலும், தந்திரமாய்
நடனமிட்ட தருமதுரை ரமணவென்றன் சந்தையதாம்
துயர்தீர்ந்தாய் சாந்தமிகு மருணையனே. 74.

இளம்பருவ வாதித்த னதிகாலை யுலக விருள்நீக்கி
விளக்கிடவே விளங்குவது போலென், னுளம்பரவி
ஞானமெனு மாதித்தன் கிரண ஒளிவீச அஞ்ஞான
பேதவிருளேகிந், தளத்தோடு சத்துவழி தலைகாணு
வாறு தனித்தநிலைத் தென்றிசையோன் தரணிதனில்
புகவென், வளம்பரவி மரணபயம் வாராம லொழித்த
வாட்டமிலா ரமணபதி வளர்மகிமைத்தேவே. 75.

நிலையில்லாக் காயமிதை நித்தியமாய் நம்பி நினைக்
துருகிச்சினைந்துமிக நேயமிகுமாசை வலைப்பட்டு மாயை
யினுல் வகைகாணு மோடி வஞ்சியரின் களபமுலை வாட்
டமதில் சொக்கி, தொலைப்பட்ட மண்பொன்னுல் மயக்
குற்றே நின்று இனையளவு நினையடையத் துதித்தறியே
னருண மலையில்வளர் ரமணமுனி மதித்தென்னையே கொ
ண்டுமதிவிளக்கியனத்தப்பால்மனாந்திடவும்செய்தார்.76

* முத்திநெறி யெனை சேர்

24. ஒழிமின் உறக்கஞ் சோம்பல்களைகழிமின் காமமதை

எனையறியா வஞ்ஞான விரம்பருவத்தனிலே யெழி
லுலக விடைய சகலும்விளையில் மூழ்கித், தினையளவு
முண்மை நினைத்திறமறியாத் தீயேன் திறமறியத் திறப்
பித்தாய் திருக்கருணை தியும், தனையறிய மயங்காமல்
களிக்கின்றோ னாலும் தவவுடனே தானதுவாயிருந்திடவ
பிரித்தால், தனையறியே னுண்மையினு தம்மானைமீட்
சுத்துரியநிலைத் தவமுளியே ரமணாபதி தேவே, 77.

மனமென்னு மூடகிகா மணியே புன்னைமதித்திடு
வோ ரவிடமே மகிழுவேன்டி. வினைமுடனியெப்போ
தமேயியுன்ற வின்பமுறும் பேயாட்ட மாடி நிற்சுரனா
னமேனும் பிணியதனைச் சதியேசெய்யச் சற்குருவா ல
ருள்பெற்றுச் சகசங்கண்டு. கனகநிலை பேறுகின்றேன்
காட்சிகொள கருதிடுசின் செயலொன்றும்பலியாதிங்கே

உருகுகின்ற மனதின்பின் றுறங்கினின்றேயுன்ப
தவு முடிப்பதுவும் கண்டேபின்றும் பெருகுகின்ற
மாயையதில் மூழ்கியாழ்த்து பேயாகும் பெண்ணிற்குப்
பொருளெதந்து, அருகுசின் றவள்கலவி யாடிநிற்பர்
அன்பு நிலைபெருளாகு மாசேயுன்னைத். திருகுநெஞ்சர
டைவாரோ தெரிவிப்பாயே திருவண்ணா மலைவாழும்
ரமணா தேவே. 79

அஞ்சலென வந்தடையு மேழைதம்மை அபயால்
தம்கொடுத்தருளு முதாரமும்பின், நெஞ்சதனி லிரமு
மின் சொல்லுமிக்க நெறியுடனல்லுபசார சிலமெங்கும்
விஞ்சவின் திருக்கருணை பொழியேயிச வெளியதனில்
நின்புகழே மேன்மையாக, செஞ்சைலஞ் சிறக்கின்ற
செல்வா வுன்னைச் சேர்ந்துமிகக் களிக்கின்றேன் ரமணா
தேவே. 80.

பொன்மயலே கொண்டுமிகப் பொருந்தி நிற்கும்
பொன்னணிபுஞ்சரிபரின் போகங்காணப், புன்மைநிலை
யுடையோர்கள் புரவிபோலப் புன்படவே தன்மன
தின் போக்கில் நிற்போர், கன்மமறைக் கன்காணார்கல
ங்கிமேலும் சுறங்கினிலு மதிவேகங் கவலைகொள்வோர்
சன்மமதைக்காண்பார்கள் சலிக்காதுள்ள தன்மைநிலை
காண்பாரோ ரமணதேவே. 81

எத்தனையோ காலமிருந்தென்ன வினை யிமையள
விலுநித்தொடுங்கி யில்லாதேகும், மித்தையதா முடலை
நாம் நமதென்றெண்ணி மிக்காகும் பாதகமேபுரிவோ
ரெல்லாம், சத்தியமாய் நின்றொளிரும் பொருளைக்
காணாச் சனங்களவ ரிருந்தென்ன விறந்துமென்ன,
தத்துவனே தற்பரனே தயவுள் ளோனே தன்னியனே
ரமணமுனி தேவ தேவே. 82.

ஞூகமத்தின் நிலைமுழுது மறிந்தோ மென்றும்
அகிலமெலா மோடிமிக அலைந்தோ மென்றும், ஏகமென
வறியாமல் மேகம் போல வெல்லாமுங் கடந்தவர்போ
லெடுத்துப் பேசும், சோகநிலை தாண்டாத சகட ரெல்
லாம் சோகத்தால் மும்மலத்தில் மூழ்கி நிற்பார், யோக
நிலை யறிவாரோ ஞூகங் காண ஓர்நிலையை ரமணமுனி
யறிவிப்பாயே. 83.

உந்திரத்தால் வெளியாகு முண்மை காணா வுருவி
நிதம் கண்விழித்தே யுரிமை யாக், மந்திரங்கள் மிக
செபித்து மகிழ்வாய் நின்று மணிமுடியாம் மலைமேலே
யேறும்போது, தந்திரத்தால் சத்திகளும் தடையே
செய்தார் தவிர்த்தவரைமமன்மேலும்தாண்டிச்சென்று
அந்தரத்தில் நின்றொளிரும் அருளைக் காண அருணகிரி
ரமணமுனி யாண்டு கொண்டர். 84.

பகாவொரு வைந்தெழுத்தி னுலத்தை யோர்ந்து
பண்பாகும் பிரணவத்தின் பாகங் கண்டு, சிகரம்வளர்
சோகமதைக் கண்டே பின்னும் சிறப்பாகும் வாசிநிலை
பேறி நின்று, புகழுவொரு சிவராஜ யோகம்பார்த்துப்
புதுந்தெருஞ் சவிகற்பப் புதுமை கண்டு, ககனநிலை யம
ர்ந்துகனி கொண்டே நாமும் களித்திடவே யருளியது
ரமண னன்றே. 85.

ஞாலமுள ஞாலமெலா மெங்கே யென்று ஞானம
தால் பார்த்திட்டால் நினைவேயாகும், கோலமுள நினை
வெங்கே குதித்த தென்று கொடுமுடியை யுள்நோக்கி
நின்றுபார்த்தால். மூலமதில் நின்றிலங்கு முண்மை
தன்னில் முயன்றிட்டால் முப்பகையு மோடிப்போகும்
சீலமுள ரமணமுனி யென்றனுக்குச் சிறப்பாக வோதி
யது மிதுவே யாகும். 86.

ஆங்காரப் புகமுடைய ஐயே யுன்றன் அடவாதித்
தனமெல்லாம் நடவா திங்கே, பாங்காகப் பரிவாரம்
பரிந்தேயேகப் பாக்கியவான் ரமணமுனி பார்க்கவென்
னைத், தேங்காத தெய்வகலை தெளிந்து கண்டேன்
தேசிகனின் திருவருளைத் தேடிக் கண்டேன், ஓங்காரப்
பிரணவமு முச்சரிக்கா உயர்நிலையா முண்மைநிலை யுள
வுங் கண்டேன். 87.

ஆசில்லா நெறியினையே யடைய வேண்டி. அது
தினமு மன்பாலே பணுக வுன்றன், மாசில்லாத் திரு
வடியை மகிழ்ந்து மென்றன் மனமதிலும் சிரமதிலும்
மங்க வைத்து, வாசிநிலை தனிலமரு முண்மை போல
வருகிநிதை மமர்ந்திடவு முயரும ஞான, குசிகைவி ளது
பவமே சூழ்ந்து நிற்க சுத்தசிவ ரமணமுனி செய்து
வைத்தீர். 88,

தொழுதுனையே துணையாகத் தாவிந்துகொண்டு தொல்புவியி னல்லலைதைத் தொலைக்கவேண்டி, அழுத துவுங் கொஞ்சமல வாசேபுன்னை யடைந்திடவே பாடி னது மனவேயில்லை, பழுதுதுவும் வாராமல் பயித்த தையே பண்பறியாப் பேதையெனைப் பார்வைகொண்டு முழுதிதுமே காத்திடவே வேண்டும் வேண்டும் முனி மௌன குருவுனையே மேவிநின்றேன். 89.

மதுவுண்ட மர்க்கடமாம் மனமேகொரு மதியில்லா வுன்றனையே மதிக்காதுள்ள. விதானவ விடாதுகாய் விரற் கடையின் விளிம்பதுவாம் நகமுரிவாயி லொட்டி யுள்ளே, ஒதுங்கிய தன்பொடியிருக்கு மௌவ்வளவுங்கா யுளமதனில் கொண்டவர்க ளுண்மையாக, வெதும்பி மிகத் திரிவதுமே யல்லால் மேலும் விரிவாரும் காமிற் கும் துணைவராவார். 90.

அறிவில்லாப் பைத்தியமென் றென்னைபேசி அனை வருமே பழித்திடவோவிங்குவைத்தாய், பொறிபுலனால் மயக்குற்றுப் புலம்பிமேலும் பொன்பூமி மடவாரின் போக்கில் நின்று, குறிகெட்டு குணக்கெட்டு குடியு மாகிக் குறித்துநில்ல நிற்காமல் குறுகிநிற்கும், வெறி கொண்ட வீனரவர் வெற்றுவார்த்தை வெறும்பிடவே செய்திடுக ரமணதேவே. 91

பனைத்தமுலைப் பருவதமே பரமேயென்றும் பட ரல்குல் தடமதுவே கைலையென்றும், பிணைப்புற்று கிடக்கின்ற பிரபுவரேவோர் பெற்றுகளின் ஞானமில்ப் பெத்தால்நிரும்,இணைப்புண்டுங்கிருக்குதுற்றேகம் வாடி யென்னசுகம் கண்டார் [illegible] [illegible], உலைப்புன் டோர் உலைவாயு மொடுங்கவேண்டி மொருறிற்றே புள் ளிடுக ரமணதேவே. 92

உன்செயலா லுண்மைநிலை யுணரவைத்த வுன்
செய்த புண்ணியந்தா னென்னவென்சொல்வேன், நன்மை
நிலை படைத்த தபோதனனென மெத்த தருமகுணா குரு
ரமணா தயவுவைத்துப், புன்மைநிலை யுடையோனென்
புலம்பல்கண்டு புதுமைநிலை பெற்றிடவே புந்திதன்
னில், சின்மயனி னனுபவத்தை சிறக்கக்காட்டிச்சிந்தை
யினை யோர்நிலையில் சிக்கவைத்தாய். 93.

கூகாவென் கூச்சலிடுங் கூட்டமதில் கூட்டிக் கூற்றுவ
னின் கைதனிலே காட்டாமல் மீட்டி, சாகாத நிலைதந்
தாய் தனித்திலைமை யாகச் சார்கின்ற பெரும்பதவி யான்
தானி பெற, ஆகாவென் சொல்வேன்கு தானவெளிப்
பெருமை யாரறிவார் பஞ்சபுல னடைக்குமுறைகுஞால்
போகாத விடந்தனிலே போக்குவித்த ரமணா புண்ணி
யனே யினனுமிகப் போயிடவே யருள்வாய். 94.

அஞ்ஞான விருளெல்லா மகன்றுபோக அருணா
கிரி குருரமணா ரருளைமேவ, மெய்ஞ்ஞான கிரணமது
மேலும்மேலும் மேன்மையுற வுள்ளவிரு ளெல்லாமேக
கைஞ்ஞானங் கழன்றுமிக்க கவலைபோக்கி கருளிகலை
காணாநிலை கழற்றியுள்ள, தாய்ஞான வுண்மைநிலைத்
துரியமேற துரைசெய்த கிருபையதை யென்னசொல்
வேன். 95.

அன்பர்குறை முடிக்கின்ற வரசேயுன்னை யனை
த்துநிதம் சுமிக்கின்றே னடிமைமேலும், துன்பமறுந்
துயரிலை கண்டபோதும் துயர்காணேன் களிக்கின்
றேன் துரையேயென்னை, நன்குறவே குருதுரியம்
தன்னில்வைத்தால் நன்மையது மிகவாகும் ரமணனே
யென் கன்மமெலாம் போகவருள் நோக்கவைத்த கரு
ணைக்குணைடாரேயென் கைம்மாறென்றே. 96

அறியாத சிறுபருவ மதுகால மென்னை அன்புள
தாய் தந்தையர்சி தம்பரத்தில் சென்று, அரிதாகும்
நடராஜர் நடனத்தைக் காட்டி ஆங்குளதோர் திரை
நீங்க ரகசியமுங் கண்டேன், பரிபாக மிதுகாலம் பாங்
கான ரமணன் பண்புடனென் னுள்நடிக்கும் நடராஜன்
தன்னைப், பரிந்துமிகக் காண்பிக்கப் பார்த்துமிகக் களி
த்து பரவெளியின் ரகஸ்யத்தி லாங்களித்து நின்
றேன். 97.

உன்னிடமு மென்னிடமு மோரிடமா தன்னு
ளென்னையுந் தன்னையு மேகமதா யாக்கி, செய்வினைநிலை
யேற்றுவிக்குங் கருவினிலே காணா சேட்டையெலா மற்றி
டவே சித்தியெலாம் பெற்றேன், உன்னடியே யுறுதி
யதா யுளமதனிற் கொண்டேன் உத்தமனே சற்குருவே
யுண்மைநிலை ரமணா, சன்மார்க்க சங்கத்து சாதுக்கள்
காணா சத்தியமே சொல்கின்றேன் கைவிடவே வேண்
டாம். 98.

சாதிமத சமயநிலை சார்ந்திடும்வே தாந்த சகலாக
மபுராண விதிகாச கலைகள், ஆதிநடு முடிவுமிலா ஆண்
டவனின் னருளை அடைந்திடவோர் வழியாகும் அது
விமொரு குறியே, நீதியதாய் நின்றிடவுள் நிலையதனில்
நோக்க நித்தியமா முக்காலத் துள்ளவனீ யென்று,
சோதிநிலை யொளியதனை வெளியதனில் காட்ட சுகம
துவே யான்மசுக மெனக்கொண்டேன் ரமணா. 99.

துன்புடைய வுலகசுக முனக்குமினி வேண்டாம்
துரியநிலை யான்மசுக மதுவொன்றே போதும், அன்பு
டைய வடியார்கள் அடிபணிந்து நின்று அவருறவில்
பழகிடநின் அவஸ்தையெலாம் போகும், இன்புடைய
பேரருளி லிலங்கிடவே நீயு மென்னை நீ பாடுமென்
னேடுகலந் தாடு, வன்புடையார் செயலதனில் வயங்கி
டவே வேண்டாம் வார்த்தைதிருக் குறிப்பதனுல் வழங்
கிட்ட ரமணா. 100.

30 போங்கலிட்டதாயார் முகம் நோக்கலிட்டுப் போனாள்
இராணி மனோவதி.

அளவிலா வுபசாந்த மாகவி றனவிளாம ஞாலாவ
வே தெளிவிலாயன மென் ஞானயதா செறுக்கிறல் முன்
குறைக்கவே களிதின்மேலமர் பாகனான விவேக வந்த
ஞமலியின் வெளிவு முன்பல்லை யுதைத் ததிர்த்திட வு
திரமோட வழுதமே. 101.

கருணாநிதியே ரமணா வென் கண்ணிற் கலந்த பே
ரொளியே, அருணாசலத்தி லமர்ந்தருளும் அருளை
யுன்னை யடைந்திட்டேன், இருண்டுலகி விரிப்பிற
வேன் இனியேயிலைக்கு மென் குறை, தருணாவடி
யேற் கருட்சோதி தந்தாயென் முன் வந்தாயே. 102.

வந்தாயென் றன் குறைநீக்க மன்னனேயென்னை
யாண்டவனே, தந்தாயுன் றன் திருக்கருணை நல்லவா
வென்னை புகன்றிடுவேன், சிந்தாகுலந் தீர்ந் திடவே நான்
சிறியேனென்னை முடிந்ததுவே, யெந்தாயெந்தை யிரா
முதலே யென்வேலையெலா முன்னதுவே. 103.

அப்பா அரசே அருணைநிலையைய ரமணா அடியே
னுன், அப்பாவென்றும் விளங்குமிருப் பாதையேயுன்
னைக் கண்டவனூர், முப்பாழிற்குள் கண்டவனை முன்னை
ந்துபேசும் பொருளில்லை செப்பாமென்ன சிரமதனில்
செல்வாயுன்ற னருட்பெருக்கே. 104.

தடும்மனதை யுள்ளடக்கி உள்ளே பார்க்க வொன்
றதுவே. அடும்கருணை யருள்வாகும் அதைபாலிலையைக்
காண்பித்துப், பாடும்சிறியேனை பாட்டினைத்தும் பலிச்
சக்கருணை பாலித்தாய், நெடும் உலகில் நிறைந்திட்ட நிதி
யே ரமணா நிதியனே. 105.

அருந்தவமே அன்பதனும் வருந்திக்கொண்டே
அருள்ராம லிங்கனவ னருளையுன்னி, இருந்தநிலை யறிந்
திடவே யெண்ணியெண்ணி யியல்புநிலை யருட்பாவி
லேகினின்று, பொருந்திடநன் குலாவிப் பெற்றபாலன்
புகழ்பெறவே பொய்யுலகின் போக்கில்நிற்கா திருந்திட
நன் மகனவனும் ரமணன்பின்னே திரிந்துமிகப் பித்
தானு னென்னசெய்வாள். 106.

திருவருளைப் பெற்றவர்கள் திறத்தை சொல்லத்
தினையளவும் முடியாத திறமேயுள்ளோன், குருவருளின்
குருத்துவத்தைக் குறிக்கலாசை குடிகொண்டே யென்
றனையுங் கூட்டிவைக்க. சருவபதி ரமணாமணி மாலை
யென்று சற்குருவின் பாதமதில் செய்துவைத்துப்,
பருவநிலை சேர்ந்திடவே பாசங்கொண்டு பணிந்துமிகக்
கிடக்கின்றேன் பாரும்பாரும். 107.

வாழியென் றுண்டவரும் வள்ளல்வாழி வானக
மும் நித்தியமாம் வஸ்துவாழி, ஆழிரு மலமழி யர
சன்வாழி அறவோக வக்தனார்களொன் றும்வாழி, வாழி
நிலை யுத்தமர்க ளுள்ளம்வாழி உண்மைநிலை யுபசாந்த
வுச்சிவாழி, காழிபிரான் முன்னால்வர் கனிந்துவாழி
கருத்திலமர் ரமணபதி குருவும்வாழி. 108

ஸ்ரீரமணதேசிகன்றுணை. முற்றிற்று.
சாந்தி! சாந்தி!! சாந்தி!!! ஓம் தத் ஸத்.

தந்தைதாயாவானுஞ் சார்கதியிங்காவானும் அந்த
மிலாவின்ப நமக்காவானும், எந்தனுயிர் தானாகுவா
னுஞ் சானாகுவானுமருட் கோனாகு வானுங்குரு.

இன்றுவருமோ நாளைக்கேவருமோ அல்லதுமற்
றென்றுவருமோ யேதுமறியே னென்கோவே துன்றுமல
வெம்மாயையற்று வெளிக்குள் வெளிகடந்து
சும்மா விருக்குஞ் சுகம்.

உண்மை நெறி.

நாமடையவேண்டிய அரும்புருஷார்த்தம் 4.

1. இந்திரிய வொழுக்கம்:— கொடியசொல் செவிபுகாது, நாதமுதலிய ஸ்தோத்திரங்களைக்கேட்டல்; அசுத்தஸ்பரிசஞ் செய்யாதிருத்தல்: குரூரமாகப் பாராதிருத்தல், உருசி சுகந்தம் விரும்பாதிருத்தல்; இன்சொல்லாடல் பொய் சொல்லாதிருத்தல்: ஜீவஹிம்சை நேரிடுங்காலத்தில் எவ்வித தந்திரத்திலாவது தடை செய்தல், ஜீவோபகார நிமித்தமாய் சாதுக்கள வாசஸ்தானங்களிலும், திவ்ய திருப்பதிகளிலும் சஞ்சரித்தல்: நன்முயற்சியிற் கொடுத்த லெடுத்தலாதிசெய்தல்: மித ஆகாரஞ்செய்தல்.

2. கரண வொழுக்கம்:— மனதைச் சிற்சபையின் கண்ணே நிறுத்தல், அதாவது முதலில், புருவமத்தியி னிற்கச் செய்தல், துர்விஷயத்தைப் பற்றாதிருக்கச் செய்தல். ஜீவ தோஷம் விசாரியாதிருத்தல், தன்னை மதியாதிருத்தல், இராகாதி நீக்கி, இயற்கைச் சத்துவமயமாதல், தனது தத்துவங்களை அக்கிரமத்திற் செல்லாது தண்டித்தல்.


3. ஜீவ வொழுக்கம்:— ஆண்மக்கள் பெண்மக்கள் முதலிய யாவர்களிடத்திலும், ஜாதி, சமயம், மதம், ஆச்சிரமம் சூத்திரம், கோத்திரம், குலம், சாஸ்திர சம்மந்தம், தேச மார்க்கம், உயர்ந்தோர், தாழ்ந்தோரென்னும் பேதம் நீக்கி எல்லவர்களும் தம்மவர்களாய்ச் சமத்திற் கொள்ளுதல்.

4. ஆன்ம வொழுக்கம்.:— யானைமுத லெறும்பீறுகத் தோன்றிய சரீரங்களிலுள்ள ஜீவான்மாவே திருச்சபையாகவும், அதனுள் பரமான்மாவே பதியாகவும் கொண்டு, யாதும் நீக்கமற எல்லாவிடத்திலும் பேதமற்று எல்லாம் தானாகநிற்றலாம். இவ்வண்ணம் நின்றும் மேற்குறித்த உண்மை நெறியாகிய அரும் புருஷார்த்தங் கைகூடும்.

நேரிசை யாசிரியப்பா.

உலகினிதயமு முலகின் முளையு மிலகும் பாவன வெழிலார் குழைகயிர், நம்முட் டாமே சம்பா டித்தன வம்மொழி கேட்டோ ரனைவரு மங்காற், நம்முரை யற்புதத் தம்பமா யிருந்தன ரிம்மகிக் கிதயமா யிருந்தொளிர் பானுவி னொளிமதி யினொத்தன் றுயரத் தொளிர்ப்ப வொளிதரு மம்மதி யுலகிற் கதுபோ, லிதய மிடமா யிருந்திடு முனிவி னுதட்டி னின்றெழ வுபட்ட தங்கள், முனைவிடங் கொள் முதல்வற்காக ஞாலம் போன்று நாங்களுங் கேட்டோஞ் செவியுறத் தூய திருவாசகத்தி லவிர்தரு மொய்ம்மோரும் பதவுண்மை, யதுவாக்கிடுவ னலக்கண மாயிறு மெய்தரு முண்மை யெனினுண்மை யானே, யம்மகா மௌனி யாகிய ரமண னெம்மறை பொருட்கு மிரகசியமான, விதயமு முளையு மெய்த்தினி துரைத்தா ரதனைப் பிறப்பவ னறிவிலி யானுஞ், சிறிதைப்பெரிதா தெரித்திடு மாடி மருவு துவார வழியெர்திரத்தி, னகத்திற் புகட்டுத் தகட்டினவோ விய மிகப்பெரி தாச்சுவர் விளையாடிடல்போ, லிதயத் தனுவா யிருந்திடு பற்ற மதவு முளையா மாடியாற் றாலமாய்க், கண்வாய் மூக்கிவை களாற்புறம் போந்து விளங்கிவ் விதவித விசித்திரங் காட்டு, மிதயத் தன்னி லிரகாட் கழித்தன னிதினின்றுலகில் யான் வருபோதி, லதித னன் முளையா லகத்துறு மென்வழி யறிந்தன னென்றெ முங் கதவு மங்கனே, யென்றவித் துமொழி யிசைத்து முடித்தன னன்றவை யன்னாறு மகத்திற் குறித்தன, துமனோ வருளால மாமனங் கொண்டன யாமவை யாறுதல் வையம் விண்டன, ஞானி யருளு சலறும் மெத்திற் ஞானி யொர்க்குச் சாற்று மோனி பாக்கியின் செய்தமிழிதுவே.

குறிப்பு — வெண்பாவோர், திருவண்ணாமலையி லெழுந் தருளியுள்ள மஹான் ப்ரம்மஸ்ரீ ரமணமஹரிஷி யவர்கள் மீது இயற்றிய இந்த ரமணமஹிமாஸ்தவ அகவலை உத்திர வண்ணியில் அர்ச்சிக்க விருத்திசெய்து கொள்ளலாம்.



இப்புஸ்தகம் வேண்டுவோர் சிதம்பரம் மேலசந்நிதி புக்ஷாப் P. பாலசுப்ரமண்ய பிள்ளையவர்களிடத்திலும்,

தபாலில் பெறவேண்டுவோர் அடியிற்கண்ட விலாசத்திற்கு ௦ அ ௦ ஸ்டாம்பு போஸ்டில் தங்கள் விலாசத்துடன் அனுப்பினால் மறு தபாலில் புக்போஸ்டில் புத்தகம் கிடைக்கும்.

இப்படிக்கு

☞ P. C. R. சிவகுருநாதப்பிள்ளை,

மின்னாலூர் போஸ்ட்டு,

சிதம்பரம் தாலூக்கா.

[illegible] அச்சியந்திரசாலை—சிதம்பரம். 20—9—22.